# கருத்துக் களம்

நட்புடன் சஞ்சீவ் ஆசிரியர் பெண்விடு

இதழ் 23ல் வெளிவந்த இன்னும் ஏன் என்ற கட்டுரை தொடர்பாக இரு விமர்சனங்கள் இதழ் 24 ல் வெளிவந்தன. இதில் வேதா இலங்கநாயகம் அவர்களால் எழுதப்பட்ட விமர்சனத்துடனான கருத்துடன் நான் முற்றும் முரண்படுகிறேன்.

அவரின் இந்தநாளைத் புரிந்துணர்வு என்ற அடிப்படையில் இச்சமூகத்தில் நிலவும் பெண் அடக்குமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சில ஐரோப்பிய சிறந்த கலாச்சாரத்தை உதாரணம் காட்டி கூறியுள்ளார். இவரின் கட்டுரையில் உள்ள ஒவ்வொரு சொற்களின் மீதும் நான் கருத்தை முன் வைப்பதன் மூலம் நம் சமூகத்தில் உள்ள பெண் அடக்குமுறையை ஆராய்வதுடன் இவர் (வேதா இலங்கநாயகம்) பெண் விடுதலை சம்பந்தமாக தவறாக புரிந்துள்ளதையும் இனம் காட்ட விரும்புகிறேன்.

"தனிச் சொத்துரிமை அமைப்பு முறை மாற்றப்படும் போது குடும்ப அமைப்பு முறை தாக்க எதிர்ப்படுமானால் மட்டுமே பெண் முற்று முழுதாக விடுதலை பெறமுடியும்.

"இலங்கா நிலைம்" கூறியுள்ள B.B.C ல் ஆசியப் பெண்களின் விபச்சாரம் பற்றி என்னும் தலைப்பில் ஒளிபரப்பான நிகழ்ச்சியைப் பற்றி இதுகின் கருத்தானது விபச்சாரத்திற்கு பணம், கருத்து வேற்றுமைகள், தாம்பத்தியத்தில் ஏற்றத் தாழ்வு, குடும்பத் தலை பண்டுமுறைகள், இவற்றைக் காரணம் காட்டி விபச்சாரமானது பெண் அடக்கு முறையின் ஒரு வடிவம் என்பதை மறுத்ததுடன் இது தமிழ்ச் சமூகத்தில் காணப்படாத ஒரு விடயம் எனவும் கூற முயல்கின்றார். முதலில் விபச்சாரம் என்பது பெண்கள் மீதான பொருளாதார கலாச்சார ரீதியான ஒடுக்கு முறையே. இது ஒவ்வொரு வர்க்க சமூகத்திலும் ஒடுக்கு முறையாளர்களால் வித்தியாசமாக கட்டமைக்கப்பட்ட அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நடாத்தப்படுகின்றது. அடிமை உடமை சமூகத்தில் அடிமைப் பெண்களை நடத்தியவர்களாலும் அதன் பின் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலப்பிரபுக்களாலும் விபச்சாரம் வழி நடத்தப்பட்டது என்பதை பல வடிவங்களில் கூற முடியும். இங்கே நிலப்பிரபுக்களால் சமய கலாச்சாரங்களை காரணம் காட்டி பல



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரட் ஆன்மாத் தயாரித்துள்ளது. இது பெண்கள் மீது உள்ள அக்கறையிலா? இல்லை, தனது இலாபத்தை உயர்த்துவதற்காகவே இதை தயாரிப்பித்துக் கின்றது. இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பெண்கள் புகைத்தல் என்பது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமல் இவ்வளவு காலமும் இருந்தது. ஆனால் அதே சமூகத்தில் தற்போது பெண்கள் சிகரட் புகைப்பதற்காக தனியான ஒரு சிகரட்டை தயாரித்துள்ளது. அதை இவ் இச்சமுகத்திற்கு கொண்டு போகும் போது ஓர் ஆண் சிகரட் புகைக்கிறான் அதனால் பெண்களும் புகைப்பது சரி என்று கூறி ஒரு பெண் விடுதலை என மக்களுக்கு எடுத்துச் சொல்ல முயலும். தொலைக்காட்சி சமூகம் அதற்காக பல யுக்திகளையும் பயன் படுத்துகின்றது. ஆனால் அது உண்மையான பெண் விடுதலையாக மாட்டாது. பெண் விடுதலையை இச்சமூகம் பல சிதைந்த முறைகளில் தான் முன்னெடுக்கின்றது. இவற்றிற்கு உதாரணமாக தொலைக்காட்சியில் சில ஐரோப்பிய, அமெரிக்க மாதரணிகள் கோரும் பெண் விடுதலையை கவனிக்கக் கூடியதாக உள்ளது. இவை அனைத்தும் முதலாளித்துவமானது தனது சந்தைப் படுத்தலை அதிகரிப்பதற்காகவே மேற்கொள்கின்றது. காரணம் உலக சனத்தொகையில் ½ பகுதிக்கு மேலானவர்கள் பெண்களே என்பதால் அவர் வேறு வகையில் பிரசாரத்தை நடாத்துகின்றது. இதன் அடிப்படையிலேயே கவர்ச்சி அழகு படுத்தும் பொருட்கள் என பல்வேறுபட்ட பெண்களுக்கான பொருட்களை அது சந்தைக்கு அனுப்புகின்றது. சற்று கவனித்து பார்ப்பின் இவ்வாணாதிக்க சமூகம் ஆணை ஒரு சமூகமாகவும் பெண்களை ஓர் ரசிக்கப்படும் பொருளாகவுமே உணர்த்துகின்றது.

உதட்டுக்கு சாயம் பூசுவதை கணவர் மறுப்பின் அதை சமூகப் பிரச்சனையாக்காது அதை வீட்டிலேயே பேசித் தீர்க்க வேண்டும் என்கிறார்.

இவரின் வாதப்படி சமூகம் பெண்களுக்கு வகுத்த 2ம் தரநிலை சரியானது என கூற வருகின்றார். மேலும் ஒரு பெண் உதட்டுக்கு சாயம் பூசுவதை கணவன் மறுக்கின்றான் என்றால் எதன் அடிப்படையில் நின்று மறுக்கிறான் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும், ஒரு ஆண் இச்சமூகக் கலாச்சாரத்தின் படி ஒரு பெண் மனைவியானாயின் அது அவள் சுதந்திரத்தை மறுக்கும் ஒரு விடயமே. அப்படியாயின் அப் பெண் அதற்கு எதிராகப் போராட வேண்டும். அதை சமூகப் பிரச்சனையாக அவள் வளர்ப்பதும் அவசியம். ஆனால் ஒருவன் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தில் நின்றபடி ஒரு பெண்ணான இது தொடர்பாக மறுப்புத் தெரிவிப்பானாயின் அதை அவன் எந்த வகையில் கையாளுகிறான் என்பது ஆராயப் பட வேண்டும். முதலில் அதைக் கூறும் அவன் பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை கடைப்பிடிக்கிறானா என்பதைக் கவனிக்க வேண்டும். அதன் பின் அவன் மறுப்பு எவ்வகையில் உள்ளது என்பதையும் ஆராய வேண்டுமே தவிர எடுத்த எடுப்பில் எவரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலர் 25 இல் வெளிவந்த 'மூன்றாவது பாதையின் அரசியல் தீர்மானம்' தொடர்பான திரு றொபின், திரு வெலிங்டன் ஆகியோரது கேள்விகளுக்கான பதில்கள் இங்கு பிரசுரமாகின்றது.

சமுதாய மாற்றம் என்பது நிலவுகின்ற உற்பத்தி முறையை இல்லாது பண்ணி, புதிய உற்பத்தி முறையையும், உறவுகளையும் கொண்டு வருவது. ஒவ்வொரு சமுதாய மாற்றத்திலும் பல்வேறு வர்க்கங்கள் பங்கு பெறும். ஒரே வர்க்கம் மாத்திரமே சமுதாய மாற்றத்தில் தலைமை வர்க்கமாக உருவாக்கம் பெறும். அதாவது தலைமையைக் கொண்டிருக்கும். திட்டமிட்ட முறையில் சுரண்டப்படுகின்ற உழைக்கும் வர்க்கம் (பாட்டாளி) தலைமை உருவாக்கம் பெறுகின்ற உண்மையான சமுதாய மாற்றம் — 'சோசலிசம்' எனப்படும். இது மேற்கத்திய கோட்பாடு அல்ல. உலகின் மூலை முடுக்குகளில் வெட்கக் கேடான வழிகளில் சுரண்டப்படுகின்ற கோடானுகோடி ஒடுக்கப்படும் மக்களின் கோட்பாடாகும்.

சமுதாய மாற்றத்தை விரும்புகின்ற ஒருவன் சாதியை ஒழிக்க போராடுவான். போராட வேண்டும். இப்படிச் சொல்வதால் சாதிக் கலவரங்களை மூட்டி விடுவதாக யாரும் அர்த்தம் வைக்கத் தேவையில்லை. சாதிப் போராட்டம் நேரடியாக சமுதாய மாற்றத்துடன் இணைகின்றது. இதனால், பத்தாம் பசலித்தனமான சாதி உறவுகளைப் இலாபம் பெறுகின்ற ஆதிக்க சக்திகள் தனிமைப் படுத்தப் படும். சாதி வேறுபாடுகள் அற்ற முறையில் உழைக்கும் மக்களை அணியில் திரட்டல். சாதியம் நிலவுகின்ற பொருளாதாரம் அழிக்கப்படுதல். புதிய பொருளாதார உறவுகளை மாற்றீடாக கொண்டு வருதல்... போன்ற பல முனைப் போராட்டங்கள் ஊடாகவே சாதியத்தை அழித்துக் கட்ட முடியும். இவ்வாறு தான் சோசலிசத்தை எட்டிப்பிடிக்கவும் முடியும். சாதிப் போராட்டமும், சோசலிசப் போராட்டத்தின் ஒரு பகுதி. சிறு சிறு போராட்டங்களை ஒன்றிணைத்து, ஒரு திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே சோசலிசத்தை அடைய முடியும்.

'ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராடுதல்' என்பதும் இவ்வாறானதே. ஆணாதிக்கம் என்பது நடப்பில் நிலவுகின்ற சமுதாயத்தில் மேலாண்மை செலுத்துகின்ற ஓர் இறுக்கமான கருத்தியல் அமைப்பு. இதற்கு இன்று நிலவுகின்ற சமுதாயத்தில் வாழும் ஆண்கள், பெண்களனைவரும் இசைவாக்கம் அடைந்துள்ளனர். இந் நிலையில் ஆண்களுக்கு எதிரான போராட்டமாக எவரும் மட்டமாக எண்ணிக் கொள்ளக்கூடாது. இன்று நிலவுகின்ற சமுதாயம் பிற்போக்குத்தனமான ஆணாதிக்க சமுதாயமே. இங்கு பெண்கள் மனித ஜீவன்களாகக் கருதப் படுவதேயில்லை. விளையாட்டுப் பொம்மைகளாகவும், விளம்பரப் பொருட்களாகவும் கருதப் படுகின்றார்கள். இனப்பெருக்க எந்திரங்களாகவும், உழைப்பில் இயந்திரங்களாகவும்.... பெண்கள் இயக்கப்படுகின்றார்கள். இவ்வாறு பல வகைகளிலும் பெண்களை அடக்கியாளும் கழிசடைத்தனமான இச் சமுதாயம் மாற்றப்பட வேண்டும். ஆரம்பம் முதலே அனைத்துப் பெண் அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராட வேண்டும். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், இராணுவத்தால் கற்பழிக்கப்பட்ட பெண்கள்.... என அனைவரும் சுதந்திரமாக வாழும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களுக்கு பலமான புலிகள் கொடுத்திருந்த நம்பிக்கையே நிலைமையை அவர்களை ஒரு தேசிய இனமாக ஏமாற்றமடையாத நிலையில் வைத்துள்ளது. ஆயினும், ஏனைய தேசிய சிறுபான்மை இனங்களை அணைத்துப் பயணிப்பதையும் கொண்டிருப்பார்கள். புலிகள் கொடுத்த பலமாக இருந்திருக்குமே-யானால், வடக்கிலிருந்து முஸ்லீம்களின் வெளியேற்றம் எந்த சக்திக்கும் கிடைத்திருக்கவே முடியாது.

முஸ்லீம் மக்களை தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரிப்ப-தால் தமிழ்த் தேசிய இனத்தின் பலம் ஒரு போதும், எவ்வகையிலும் குறைந்து விடாது. தேசிய சிறுபான்மை இனங்களின் சுய நிர்ணயத்தையும், முழுமையான சமத்துவத்தையும் அங்கீகரிப்பதே, தமிழ் தேசிய இனத்தின் மிகப் பெரிய பலமாகும்.

வடக்கில் புலிகள் முஸ்லீம் மக்களின் சுய நிர்ணயத்தை அங்கீ-கரிக்கவில்லை. ஆனால், முஸ்லீம் மக்கள் — தமிழ்த் தேசிய இனம் இரண்டையும் ஐக்கிய சக்தியாக எப்படி பார்க்க முடியாது போனதோ — அதேபோல சிங்கள மக்களையும் ஒரே சக்தியாகப் பார்க்க முடியாது. இன்றைய அரசு தமிழ் மக்களுக்கு மட்டும் எதிரானதல்ல; சிங்கள மக்களுக்கும், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எதிரானதே.

எமது போராட்டம் தமிழ் மக்கள் அனைவருக்கும் உரியதாகும். ஒருவருக்கு ஒருவர் உதவுகின்ற போது, அண்டை தேசம் (சிங்கள மக்கள்) ஒரு புரட்சிகரத் தலைமை தோன்றாத போது, ஐக்கிய முன்னணிக்-கான வழிகளில் பிரிந்து போகும் தன்மை. இது ஐக்கிய முன்னணிகளை பிரிக்கின்றன.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் புதிய ஜனநாயகப் புரட்சியாகும். இக்கருத்தினையே கட்டுரை பரிசீலனை செய்ததும் பகுதிகள், இனங்களின் சமத்துவத்தைப் போலும் எல்லைகளையும் உண்டு.

இன்றைய சூழ்நிலையின் தேவை மூன்றாவது பாதை. இது ஆயுதப் போராட்டம் சாத்தியமானதே. இதற்கான தலைவர்களையோ, ஸ்தாப-னத்தையோ யாரானும் உருவாக்குவார்.

— மூன்றாவது பாதை —

## வாசகர்களின் கவனத்திற்கு!!

தேவரூபனின் "கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடி-க்கப்பட்டு விட்டதா?" என்ற கட்டுரையும், சாந்தனின் "சீனா ஒரு வரலாற்றுத் துயரம்" என்ற கட்டுரை-யும் அடுத்த இதழில் பிரசுரமாகும் என்பதை அறி-யத் தருகின்றோம்.

— சந்ரேவி —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீரமும் விவேகமும்

வாழும் போது வாழ்க்கை என்பது மனித சமுதாயத்தின் அடிப்படை மரியம். பொலிவியாவில் தனது பாதி பாதியாகும் ஒரு பொருத்த முக்கிய தெரிந்திருந்தால், சைமன் பொலிவரின் தேசபக்த சிந்தனையை அறிந்து இருக்கமாட்டார். இந்திய ராணுவம் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போராட்டத்தில் இறங்கும் போது இந்தியாவின் சரித்திரத்தை முக்கிய தெரிந்திருந்தால், இந்திய ராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரை தொடங்கியிருக்கமாட்டாது. அதே போல்தான் ஐரோப்பாவிலுள்ள தமிழ் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களின் நிலை. முன்பு ஒரு காலத்தில் "சங்கம் வளர்த்த தமிழன்" என்று கூறுவார்கள். ஆனால் இப்போ சங்கத்தை வளர்த்த தமிழர்களாக இருக்கின்றார்கள். பத்துப் பேரை (சங்கத்தின் தலைவராக இருக்கும் வரை தனது உயிர் காக்கிறவரை கூட விட்ட பின்பும் கூட) வைத்து ஒரு சங்கத்தினை நடத்த முடியாத தலைவர்கள், எப்படி தமிழ் சமூகத்தை அல்லது தமிழீழப் போராட்டத்தை விமர்சிக்க முடியும்?

ஐரோப்பாவில் தமிழ் சங்கங்கள் ஆரம்பிக்கும் போது, ஐம்பது, நூறு பேர்களை ஆரம்பிப்பார்கள். ஐந்து, ஆறு வருடம் போனபின் அந்தச் சங்கத்தில் ஐந்து, ஆறு பேர்தான் இருப்பார்கள். அந்த வளரும் சங்கத்தின் வளர்ச்சி தெரியாதிருக்கும் போது எப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தையோ, நிர்வாகத்தையோ கொச்சைப்படுத்த முடியும்.

வீரம் என்பது போராட்டத்தின் முடிவில் தான் தெரியும். விவேகம் என்பது பொறுமையின் முடிவில் தான் தெரியும். ஒரு குடும்பத்தை ஒழுங்குபடுத்த முடியாதவனாக நான் இருக்கும் போது, எப்படி ஒரு இனத்தின் (சாதி) வேறுபாட்டுக்காகப் பாடுபட முடியும். தமிழ் எழுத்தில் சாதி என்னும் உணர்வு குறைவாகவிடத்திலும் இருக்கிறது. அந்த உணர்வுகள் போதை ஏறியிருந்தால், தமிழீழத்தில் சாதியின் பெயரால் இந்த இருதான் ஒரு தன்மானமுள்ள ஒவ்வொருவனும் ஆயுதம் ஏந்துவான். தமிழீழமே சாதியின் பெயரால் சுடுகாடாகி விடும். என்னைப் பொறுத்த வரை (சாதி இல்லை என்று சொல்லவில்லை) வர்க்கப் பிரச்சனை தான், பணக்காரர், கூலித் தொழிலாளர் பிரச்சனை. ஒரு நூறு ரூபா சம்பளம் எடுக்கும் போது வைகாசி கிலோவை 70.000 ரூபா எடுக்கும் போதும் ஐந்து நிலை தான் உள்ளது. குடும்பத்தின் உழைப்பில் 10 பேர் இருக்கின்ற சாப்பிடும் நிலை மாறி ஒவ்வொருவரும் சமமாக வாழக்கூடியதாக வேண்டும். வேண்டியவர்களுக்கு இந்த பிள்ளைகள் போராட்டத்தால் வெல்லும் என்று கொள்கையல்லவில்லை. அவ்விடயத்தை ஒரு புரட்சியின் கீழ், ஒரு தேசிய போராட்டத்தின் கீழ், ஒரு தேசிய பொருளாதார வளர்ச்சியின் கீழ் நியாயமாக வர்க்கப் பிரச்சனையை வென்று கொள்ள முடியும். ஐரோப்பாவில் வாழும் சங்க தலைவர்கள், ஐரோப்பாவிலுள்ள ஆடம்பர வாழ்க்கை முறையைத்தான் பார்க்கின்றார்களே தவிர, கடந்த காலம் கஷ்டங்களை நினைப்பதில்லை. இந்த நிலை எப்படி வந்தது என்பதை கருத்தில் கொள்வதில்லை. வடக்கு கிழக்கு பகுதிகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக இல்லை (அதுதான்). அப்படியிருக்கும் போது கடமையை எப்படிப் போட முடியும். அது அடிக்கடி மாறுகிறது தானே? ஐரோப்பாவில் பெண் விடுதலையாளர்கள். ஒதுக்கப்படுத்தலை இல்லை. நாம் மெல்லமெல்லச் சமைக்கக் கற்றுக்கொள்கிறோம். சமையல் செய்வதுபோலவே பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்பதும் உண்டு. இந்த நிலை தமிழீழத்தில் மாறுதல் என்று சொல்லப்படுவதும் உண்டு. ஐரோப்பா வாழ்க்கை முறையை தற்போது தமிழீழத்தில் கொண்டுவர நினைத்தால், அது பாரம்பரிய நடைமுறையை மாற்றி செய்யும் தவறாக தான் இருக்கும். அடிப்படையை (பொருளாதாரத்தை) பிரச்சனையை மாற்றியமைக்க வேண்டும்.

ஏகாதிபத்தியம் தந்தை என அழைக்கப்படும் ஜேர்மனியின் ஹிட்லரும் சரி, ரஷ்ய மக்களை வீரமான வெற்றிகாண்கிறதும் சரி, சீனாவின் விடுதலை மாவோ கண்டதும் சரி, இப்படி எந்த தலைவர்களாகவும் சரி ஒரு நிலையிலிருந்து தான் உதயமாகியிருக்கிறார்கள். எனவே தேசியப் போராட்டத்தையும், பெண் விடுதலை போராட்டத்தையும் ஒரு தேசிய போராட்டத்துடன் ஒன்று சேர்த்து போராடினால், நிச்சயமாக நாம் அனைத்து விடுதலையையும் வென்றெடுக்க முடியும். எனவே அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை வழிநடத்த சரியான கொள்கையுடைய, நல்லதொரு தலைமைத்துவம் தேவை.

இவ்வுலகில் எந்த வெற்றிக்கும் ஒரு தலைவன் உண்டு. ஒரு இனம் அழிவதும் சரி, ஒரு மனிதனின் பலமும் சரி, பலவீனமும் சரி, ஒரு அரசாங்கமும் சரி எதுவானாலும் ஒரு சிறந்த தலைவன் உண்டு. சரியான அரசாங்கத்தை அமைக்கக் கூடிய நல்லதொரு தலைமையின் புரட்சிகரமான போராட்டத்தை நாம் முதலாவதாக ஆதரிக்க வேண்டும். அமெரிக்கா, ரஷ்யா என்ற போர்வெறி நாடுகள், தற்பொழுது பொருளாதாரத்தில் பலவீனத்திற்கும் தான் போட்டி. தமிழ் இனத்தைப் பொறுத்தவரை பலவீனம் தான் அதிகம். அந்த தமிழ் இனத்தின் முன் பொதுவுடைமைக் கொள்கையை (சோசலிசக் கொள்கைகள்) வைப்பது மிகவும் கடினமான விடயம். சோசலிச கொள்கை என்பது இந்தியாவில் கூட, நாட்டுக்கு நாடு வேறுபட்டு இருக்கிறது. தமிழ் இனத்தைப் பொறுத்தவரை, அவர்களின் மொழி, கலாச்சாரம், பண்பாடு, உணர்வுகள், வாழ்க்கைத்தரம் இப்படி இவை எல்லாவற்றையும் அறிய வேண்டியுள்ளது. பெண்ணிலைவாதியும், பொதுவுடைமைவாதியும் மென்மையாக ஒன்றுபட்டு நிற்க மாட்டார்கள். இவர்களுக்குள் மத்தியில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் மொத்த உணர்வை அறியாது தேசிய போராட்டம் இந்த கட்டத்தில் ஒரு தலைவனும் சிறப்பான ஆட்சியை ஏற்படுத்த முடியாது. இந்த உணர்வு ஒவ்வொரு தமிழனுக்கும் வரவேண்டும். நாம் தமிழர், நாம் ஒரு தேசிய இனம் என்ற உணர்வு ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் எதிர்பார்க்கும் அனைத்து விடுதலையையும் முழுமையாக வென்றெடுக்க முடியும்.

நி. ஜெமின்
TRIGE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பினிய தோழர் சஞ்சீவி ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் அனுப்பிய இதழ் கிடைத்தது. நன்றி. அகதி வாழ்க்கையிலும் சிறப்பாகத் தொண்டாற்றும் தங்கள் தொண்டுள்ளத்திற்கு நன்றி.


'சண்'ணைப் பற்றி அவர் இறப்பிற்குப்பின் தூற்றும் பலரிடமிருந்து, அவரைப் பற்றிய சரியான புரிதலுடன் சாந்தன் கட்டுரை அருமை. 'சண்'-ணின் இறுதிக்காலத்திலேயே அவருடன் கடிதம் மூலம் எமக்கு அவரின் தோழமை பூர்வமான நட்பு கிடைத்தது.

எமது புலம்பெயர்ந்தோர் இலக்கியத் தொகுப்பிற்கு, தங்கள் இதழ்களில் வெளிவந்த சிறந்த சிறுகதை, கவிதை, அங்கு தமிழர்களுடன் ஏற்பட்ட புதுவிதமான அனுபவங்கள் முதலியவற்றை சஞ்சீவியில் வெளிவந்தவற்றை எமக்கு அனுப்பவும். இது ஒன்றே தாங்கள் எமக்குச் செய்யும் உதவியாகும்.

தோழமையுடன்,
ப. திருநாவுக்கரசு.

---

(42 ஆம் பக்கத் தொடர்ச்சி)



பரிசில்களுக்குரியோர் :

1. R.Ragavan
   4300 Holbæk.
2. V.Nathan
   5800 Nyborg.
3. P.Rajendran
   3520 Farum.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

